பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4
19 04 2025 **SATURDAY** 6 30 **PM**

வணக்கம் - மாநிலச் செய்திகள்
தலைப்புச் செய்திகள்

1. உடல் பருமன் பிரச்சினை தொடர்பான விழிப்புணர்வு நடவடிக்கைகள் கூடுதலாக மேற்கொள்ளப்பட வேண்டியதன் அவசியத்தை பிரதமர் திரு. நரேந்திர மோடி வலியுறுத்தியுள்ளார்.

2. மக்களின் சுகாதாரமான வாழ்க்கையை உறுதி செய்வதற்காக மத்திய அரசு பல்வேறு ஒருங்கிணைந்த நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

3. வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்க வேண்டும் என்ற நோக்கில் பிரதமர் திரு. நரேந்திர மோடி செயல்பட்டு வருவதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு. எல். முருகன் கூறியுள்ளார்.

4. கைவினைக் கலைஞர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான திட்டத்தை முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் இன்று தொடங்கி வைத்தார்.

5. உலக ஸ்குவாஷ் தகுதிச்சுற்று போட்டியில் இந்தியாவின் **Veer Chotrani** மற்றும் **Anahat Singh** இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளனர்.

<<<<<>>>>>>

உடல் பருமன் பிரச்சினை தொடர்பான விழிப்புணர்வு நடவடிக்கைகள் கூடுதலாக மேற்கொள்ளப்பட வேண்டியதன் அவசியத்தை பிரதமர் திரு. நரேந்திர மோடி வலியுறுத்தியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், உணவில் எண்ணெய் பயன்பாட்டை குறைப்பது பெரிய அளவில் மாற்றத்தை ஏற்படுத்தும் என்று குறிப்பிட்டுள்ளார்.

உலக கல்லீரல் தினத்தை முன்னிட்டு, மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு. ஜெ.பி. நட்டா வெளியிட்டுள்ள செய்தியையும் பிரதமர் பகிர்ந்துள்ளார்.

<<<<<>>>>>>

பொதுமக்களின் சுகாதாரமான வாழ்க்கையை உறுதி செய்வதற்காக மத்திய அரசு பல்வேறு ஒருங்கிணைந்த நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

உலக கல்லீரல் தினத்தை ஒட்டி, இன்று புதுதில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்து கொண்டு அவர் பேசினார்.

மத்தியில் பிஜேபி தலைமையிலான அரசு பொறுப்பேற்ற பின்னர் சுகாதாரத்துறைக்கான நிதி ஒதுக்கீடு வெகுவாக அதிகரிக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

2014ஆம் ஆண்டு 37 ஆயிரம் கோடி ரூபாயாக இருந்த சுகாதாரத்துறைக்கான ஒதுக்கீடு, தற்போது 1 லட்சத்து 27 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு அதிகரிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

எய்ம்ஸ் மருத்துவமனைகளின் எண்ணிக்கையும் 7-லிருந்து 23ஆக அதிகரிக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

மருத்துவக் கல்லூரிகளின் எண்ணிக்கையும் 387லிருந்து 780ஆக அதிகரித்துள்ளது என்றார்.

கல்லீரல் பாதிப்பை தடுப்பதற்கான விழிப்புணர்வு நடவடிக்கைகள் கூடுதலாக மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் அவர் கூறினார்.

இளையோர், நாள்தோறும் இரண்டு மணி நேரம் உடற்பயிற்சியை மேற்கொள்ள வேண்டும் என்றும் திரு. அமித் ஷா வலியுறுத்தினார்.

<<<<<>>>>>>

வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்க வேண்டும் என்ற நோக்கில் பிரதமர் திரு. நரேந்திர மோடி செயல்பட்டு வருவதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு. எல். முருகன் கூறியுள்ளார்.

இன்று கோவையில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், மத்திய அரசு இதுவரை இல்லாத அளவிற்கு மருத்துவ கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தி வருவதாக தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் - முருகன் 56 செகண்ட்ஸ்)

<<<<<>>>>>>

கைவினைக் கலைஞர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் மாநில அரசு திட்டங்களை செயல்படுத்தி வருவதாக முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூரில் இன்று இத்திட்டத்தை தொடங்கி வைத்து பேசிய அவர், குறு சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் எண்ணிக்கையில், நாட்டிலேயே தமிழகம் மூன்றாவது இடத்தில் உள்ளதாக தெரிவித்தார்.

இத்திட்டத்தின் கீழ் 8 ஆயிரத்து 951 பயனாளிகளுக்கு வங்கிகள் மூலம் கடனுதவி பரிந்துரைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

தொழில் தொடங்குவதற்கான வயது 35ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளதாகவும், இதில் 25 வகையான தொழில்கள் சேர்க்கப்பட்டிருப்பதாகவும் திரு. மு.க.ஸ்டாலின் தெரிவித்தார்.

<<<<<>>>>>>

மாணவர்கள் கோடைகால விடுமுறையை பயன்படுத்திக் கொண்டு, தங்களது திறமைகளை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்று மாநில பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி கூறியுள்ளார்.

நாகையில் கோடைகால சிறப்பு ஓவிய பயிற்சி மையத்தை திறந்து வைத்து அவர் பேசினார்.

ஓவியப் பயிற்சி மாணவர்களின் மனநிலையை ஒருமுகப்படுத்த உதவிடும் என்று அமைச்சர் தெரிவித்தார்.

<<<<<>>>>>>

மாற்றுத்திறனாளிகளின் நலன்களை பாதுகாக்க மாநில அரசு உயர் முன்னுரிமை வழங்கி வருவதாக பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. எ.வ. வேலு தெரிவித்துள்ளார்.

திருவண்ணாமலையில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் 100 மாற்றுத் திறனாளிகளுக்கு இணைப்புச் சக்கரம் பொருத்தப்பட்ட இருசக்கர வாகனங்களை வழங்கிப் பேசிய அவர், பிற மாநிலங்களைக் காட்டிலும் தமிழகத்தில் மாற்றுத் திறனாளிகளுக்கு சிறப்பாக சேவைகள் வழங்கப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

மாற்றுத்திறனாளிகளின் உரிமைகளை பாதுகாக்கும் அரணாக மாநில அரசு செயல்பட்டு வருவதாக அமைச்சர் கூறினார்.

<<<<<>>>>>>

தமிழக சட்டப்பேரவை தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணி வெற்றிபெறும் என்று பிஜேபி மகளிர் அணித்தலைவர் திருமதி. வானதி சீனிவாசன் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இன்று கோவையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்த கூட்டணியில் மேலும் பல கட்சிகள் இணைய வாய்ப்புள்ளதாக தெரிவித்தார்.

மத்திய அரசு, எந்தவொரு மொழியையும் கட்டாயப்படுத்தவில்லை என்று அவர் திட்டவட்டமாக கூறினார்.

தனியார் பள்ளிகளைப் போல் அரசு பள்ளிகளிலும் பிற மொழிகளை கற்க, திமுக அரசு அனுமதி மறுப்பது ஏன் என்று திருமதி. வானதி சீனிவாசன் வினவினார்.

<<<<<>>>>>>

தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் அடுத்த இரு தினங்களுக்கு மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு. செந்தாமரைக்கண்ணன் கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

(சவுண்ட் பைட் - செந்தாமரை 37 செகண்ட்ஸ்)

<<<<<>>>>>>

மாவட்டச் செய்திகள்

மயிலாடுதுறை மாவட்டம், தருமபுரம் கலைக்கல்லூரியில் நடைபெற்ற மருத்துவ முகாமில் 500-க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.

<<<<<>>>>>>

புதுக்கோட்டை மாவட்டத்தில் விவசாயிகள் தங்கள் நில உரிமையினை பதிவு செய்யும் பணியினை ஆட்சியர் திருமதி. அருணா ஆய்வு செய்தார்.

<<<<<>>>>>>

திருநெல்வேலி அரசு மருத்துவமனை மாநிலத்திலேயே மூன்றாவது இடத்தில் உள்ளதாக ஆட்சியர் திரு. சுகுமார் கூறியுள்ளார்.

<<<<<>>>>>>

நாமக்கல்லை அடுத்த வசந்தபுரத்தில் நகர்ப்புற வீட்டுமனை வழங்கும் சிறப்பு திட்டத்தின் கீழ், பட்டா வழங்குவது தொடர்பாக ஆட்சியர் திருமதி. உமா, இன்று ஆய்வு மேற்கொண்டார்.

<<<<<>>>>>>

நீலகிரி மாவட்டம், உதகமண்டலத்தில் பிளாஸ்டிக் கழிவுகளை அகற்றும் பணியினை ஆட்சியர் திருமதி. லெட்சுமி பவ்யா தண்ணீரு இன்று ஆய்வு செய்தார்.

<<<<<>>>>>>

வேலூர் மாவட்டம், குடியாத்தம் அருகே நடைபெற்ற எருது விடும் விழாவில், மாடு முட்டியதில் ஒருவர் உயிரிழந்தார்.

<<<<<>>>>>>

திருநெல்வேலியிலிருந்து **Hazrat Nazamuddin** இடையே நாளை மறுநாள் இரவு மணி 10.15க்கு சிறப்பு ரயில் இயக்கப்படவுள்ளதாக தெற்கு ரயில்வே தெரிவித்துள்ளது.

<<<<<>>>>>>

விளையாட்டுச் செய்திகள்

உலக ஸ்குவாஷ் தகுதிச்சுற்று போட்டியில் இந்தியாவின் **Veer Chotrani** மற்றும் **Anahat Singh** இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளனர்.

மலேசியாவின் கோலாலம்பூரில் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவு அரையிறுதியட்டத்தில் **Veer Chotrani 3-1** என்ற செட்கணக்கில் ஹாங்காங்கின் **Chi Him Wong-** ஐ வென்றார்.

மகளிர் ஒற்றையர் பிரிவில் **Anahat Singh, 3-0** செட்கணக்கில் ஹாங்காங்கின் **Helan Teng –** ஐ வென்றார்.

-----------

பிரான்ஸில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ரியா பாட்டியா – **Burundi** யின் **Sada Nahimana** இணை இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

**<<<<<>>>>>>**

துபாயில் நடைபெற்ற **Bridge** சாம்பியன் போட்டியில் இந்தியா 3 தங்கம், ஒரு வெள்ளிப்பதக்கம் வென்றது.

ஆடவர், மகளிர் மற்றும் சீனியர் குழுப் பிரிவுகளில் இந்தியா தங்கப்பதக்கம் வென்றது.

கலப்புக்குழுப் பிரிவில் இந்தியாவுக்கு வெள்ளிப்பதக்கம் கிடைத்தது

**<<<<<>>>>>>**

ஐபிஎல் கிரிக்கெட் போட்டியில் தில்லி அணிக்கு எதிரான ஆட்டத்தில் 204 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ஆடிவரும் குஜராத் அணி

குஜராத் அணி சற்றுமுன்வரை 9 ஓவரில் 2 விக்கெட் இழப்புக்கு 85 ரன் எடுத்துள்ளது.

அஹமதாபாதில் நடைபெற்று வரும் இப்போட்டியில் முதலில் விளையாடிய தில்லி அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 8 விக்கெட் இழப்புக்கு 203 ரன் எடுத்தது.

ஜெய்ப்பூரில் இரவு மணி 7.30 மணிக்கு நடைபெறவுள்ள மற்றொரு ஆட்டத்தில் லக்னோ – ராஜஸ்தான் அணிகள் மோதுகின்றன.

**<<<<<END>>>>>>**